[1990 ஏப்ரல் 2

கங்கை கொண்ட சோழபுரத்தில் சுற்றுலா மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஆம். திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கங்கை கொண்ட சோழபுரம் மாவட்ட சுற்றுலாத் தலமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட ஒரு மிகப்பெரிய கோவில் கோபுரம் இருக்கிறது. அந்தக் கோபுரத்தைப் பார்ப்பதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நிறைய பேர்கள் வருகிறார்கள். அவர்கள் வந்து பார்வையிடுகிற போது, தங்குவதற்கு ஏதுவாக இப்போது போதுமான இடவசதி இல்லை. ஆகவே, அரசு அங்கே சுற்றுலா மையம் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து எங்களுடைய கவனத்தில் இருக்கிறது. அங்கே சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக ஒரு விடுதி கட்ட வேண்டுமென்றால், அதற்கான நிலம் வேண்டும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கேயுள்ள அதிகாரிகளோடு கலந்து பேசி தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து தருவார்களானால், உடனடியாக அந்த விடுதி கட்டி முடிக்கப்படும்.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் பார்த்துக் கொடுத்தால் சீக்கிரம் கட்டி முடிப்பதாகச் சொன்னார்கள், எவ்வளவு சீக்கிரமாக வேண்டுமானாலும் இடம் பார்த்துக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். எனவே, அதைச் சீக்கிரம் அரசு முடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நிச்சயமாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடையம் ஒன்றியத்தில் புதிதாக சத்துணவு மையம் துவக்குதல்.

*5021 திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஒன்றியத்தில் துப்பாக்குடி, முதலியார்பட்டி, கட்டேரி பட்டி, பரம்பு ஆகிய இடங்களில் புதிதாக சத்துணவு மையம் துவக்கப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, (அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஒன்றியத்தில் துப்பாக்குடி, முதலியார்பட்டி, கட்டேரிப்பட்டி, பரம்பு ஆகிய இடங்களில ஏற்கனவே சத்துணவுக் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) எனவே, புதிதாக சத்துணவு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திருவள்ளூர் தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

*3699—திரு. எஸ். ஆர். முனிரத்தினம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவள்ளூர் தொகுதியில் புதிதாக ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சுகாதார நிலையங்கள் தொடங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதியில் புலியூர் மற்றும் பெருமாள்பட்டு ஆகிய இரண்டு கிராமங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. அன்பில் பொய்யாமொழி: தலைவர் அவர்களே, கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன, அவை எந்த அடிப்படையில் துவங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்குப் பலமுறை இதே மன்றத்தில் நான் பதில் அளித்து இருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், ஒரு ஆரம்பச் சுகாதார நிலையத்திலிருந்து பக்கத்தில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம் எட்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் அந்த ஊரில் இருக்கிற மக்கள் ஐந்து ஏக்கர் நிலமும், 10,000 ரூபாய் பணமும் தருவார்களானால், அதைப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு, அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கொடுக்கிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு இந்த ஆண்டில் 30,000 மக்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் 174 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது